**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 156 இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2011 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி I - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

பகுதி 2 - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி I

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் நிறுவகத்தினதும் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மற்றும் நிறுவகம்**

| செலவினத் தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 215 | தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் |
| - | இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 8,608,010,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 7,025,536,569 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும்

திணைக்களங்களினதும் ஒவ்வொரு தேறிய ஏற்பாடுகளுக்கான தேறிய சேமிப்பு முறையே ரூபா 1,375,304,417 தொகையும் ரூபா 207,169,014 தொகையுமாக ரூபா 1,582,473,431 கூட்டுத்தொகையாகக் காணப்பட்டதுடன் இது மொத்தத் தேறிய ஏற்பாட்டில் முறையே 19 சதவீதமாகவும் 16 சதவீதமாகவும் காணப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | தேறிய ஏற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 156 | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 2,555,445,000 | 4,753,755,000 | 2,470,712,217 | 3,463,183,366 | 84,732,783 | 1,290,571,634 |
| 215 | தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 1,015,427,000 | 283,383,000 | 999,174,600 | 92,466,386 | 16,252,400 | 190,916,614 |
| | | 3,570,872,000 | 5,037,138,000 | 3,469,886,817 | 3,555,649,752 | 100,985,183 | 1,481,488,248 |

## (ஆ) மேலதிக ஏற்பாடு

### (i) மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு செயற்பாடுகளுக்காக 22 மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 29,572,700 கூட்டுத்தொகையான ஏற்பாடுகளில் ரூபா 27,981,834 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### (ii) ஏனைய நிறுவகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு

அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 10 நிறுவகங்களுக்கு ரூபா 4,510,270,000 தொகையான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு ரூபா 3,998,488,041 ஆகக் காணப்பட்டன. மிகுதி ரூபா 511,781,959 ஆகும்.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### (அ) பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| அமைச்சு /திணைக்களம் | விடய இல. | ஆகக் கூடிய செலவின எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய வரவு மீதி எல்லை | உள்ளபடியானது |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 156 | 15601 | 23,550,000 | 19,259,509 | 8,800,000 | 16,728,127 | 85,000,000 | 63,978,724 |
| 215 | 21501 | 65,700,000 | 60,226,646 | 42,000,000 | 61,040,738 | 280,000,000 | 200,260,193 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்குகள்

அமைசசு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 4,333,922 தொகையான வரவு மீதி காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு / திணைக்களம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மீதி |
|---|---|
| | ரூபா |
| இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 4,249,002 |
| தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 84,920 |
| மொத்தம் | 4,333,922 |

மேற்குறித்த ரூபா 4,249,002 தொகையான அமைச்சின் கட்டுநிதி மீதி 2012 மார்ச் இறுதியிலும் தொழிநுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்புத் திணைக்களத்தின் ரூபா 84,920 தொகையான கட்டுநிதி மீதி 2012 சனவரி 23 ஆம் திகதியும் திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஆ) பொது வைப்புக் கணக்குகள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,093,534 ஆனதுடன் இது தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| அமைச்சு / திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0066/000 | 25,407,732 |
| - மேற்படி - | 6000/0000/00/0015/0042/000 | 7,379,430 |
| தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 6000/0000/00/0015/0096/000 | 17,306,372 |
| மொத்தம் | | 50,093,534 |

## பகுதி II

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 156 - இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 செப்தெம்பர் 05 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) 09 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,310,000 கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்ட ஏற்பாடு முழுவதும் எஞ்சியிருந்தது.

(ii) 43 செலவின விடயங்களுக்கான ஏற்பாட்டு சேமிப்பு ரூபா 35,072 முதல் ரூபா 485,776,775 வரை அதாவது 25% முதல் 94% வரையான வீச்சில் காணப்பட்டது.

(iii) 06 செலவின விடயங்களுக்கான மொத்த ஏற்பாடான ரூபா 39,025,000 தொகை நி.பி. 66 இன் மூலம் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(iv) 06 செலவின விடயங்களுக்கான ஏற்பாடு போதாமையால் நி.பி. 66 இன் மூலம் ரூபா 18,509,898 தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் அச் செலவின விடயங்களின் ஏற்பாட்டு சேமிப்பு ரூபா 11,616,277 ஆன அதாவது வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டில் 63 சதவீதமாகியிருந்தது.

**(ஆ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பபணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரமும் 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 402 மற்றும் 402(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு உரித்தான செயலாற்றல் அறிக்கை 2011 திசெம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. முதல் 08 மாதங்களின் செயலாற்றல் மாத்திரம் அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

(i) 15601 விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 661,859 ஆனதுடன் அந் நிலுவை மீதி அறவிடப்பட்டதன் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் பட்டோலையில் குறிப்பிடப்பட வேண்டிய ரூபா 172,407 தொகையான 02 கடன் மீதிகள் தனியான மீதிப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**1.4 சொத்து முகாமைத்துவம்**

**(அ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சின் 03 வாகனங்கள் பல வருடங்களுக்கு முன்னர் விளையாட்டு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இருப்புப் பற்றாக்குறை**

தேசிய இளைஞர் அணியிடம் உள்ள ஹெய்யன்துடவ களஞ்சியத்தின் ரூபா 78,540 தொகையான இருப்புப் பற்றாக்குறை காணப்பட்டது.

**(இ) விளைவற்ற இருப்பு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தேசிய இளைஞர் அணியினால் பயிற்சியாளர்களின் சீருடையின் மாதிரி அடிக்கடி மாற்றப்படுவதும், தேவைப்பாடு தொடர்பாக சிறப்பாக கற்றறிந்து கொள்வனவு செய்யப்படாமையாலும் 3513 ஆன சீருடை மற்றும் ஆடைகளின் அலகுகள் 03 ஆண்டுகளுக்கு அதிகமான காலத்தில் இருந்து ஹெய்யன்துடுவ களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் வேறு இடத்தில் உள்ள பழைய காற்சட்டைகளும் 2011 நவம்பர் மாதம் அக் களஞ்சியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

(ii) 2007 யூலை மாதம் மீதியாகக் காணப்பட்ட வழங்கலுக்காக இளைஞர் அணியால் கொள்வனவு செய்யப்பட்ட 2048 பல்வேறு பொருட்களில் 2011 சனவரி அளவில் 146 அலகுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

## 1.5. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(அ)** | சனாதிபதி செயலக சுற்றறிக்கை | | |
| (i) | 2007 பெப்ரவரி 28 ஆம் திகதிய பீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவச் சுற்றறிக்கையின் iii ஆம் பந்தி | 2,367,270 | பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஹொட்டேல்களில் நடாத்தி அமைச்சினால் ரூபா 1,596,070 தொகையும் சிறு வியாபார அபிவிருத்தி பிரிவினால் ரூபா 771,200 தொகையும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1 17/1 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவச் சுற்றறிக்கை 3.1 ஆம் உப பந்தி | - | அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்கள் 03 ஆக இருக்க வேண்டி போதிலும் இதற்கு மேலதிகமாக அமைச்சருக்காகவும் பிரதி அமைச்சருக்காகவும் முறையே 11 வாகனங்களும் 08 வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் | | |
| | நி.பி. 94<br>1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் உப பந்தி | 2,205,632 | 12 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு மேலாக பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறை

| | | |
|---|---|---|
| 2.9.1 வழிகாட்டி | 272,898 | தேசிய இளைஞர் அணியால் கொள்வனவுக் குழுவின் 10 அங்கத்தவர்களுக்காக மேலதிகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| | 578,500 | தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழுக் கூட்ட எண்ணிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் ரூபா 578,500 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 1.6 செயலாற்றல்

550 மாணவர்களின் பங்கேற்பை எதிர்பார்த்து மீளாய்வாண்டின் போது தேசிய இளைஞர் படையணியால் ஹொட்டேல் பயிற்சி பாடநெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இதற்காக ரூபா 8,753,292 தொகையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஏவ்வாறெனினும், 421 மாணவர்கள் மாத்திரமே பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் பாடநெறிகள் பூர்த்தி செய்யப்பட்டு சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 296 பேர் மாத்திரமேயாகும்.

## 1.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வுகளின் போது அவ்வாறு கண்டறியப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

தேசிய இளைஞர் படையணியின் பயிற்சி நிலையங்களுக்கு 2010 ஆம் ஆண்டிற்காக உணவு வழங்கும் கொள்வனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்த 05 வழங்குனர்களுக்கு ரூபா 63,254,400 கூட்டுத்தொகையான கொள்வனவுகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.4.1 (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் பயிற்சி நிலையங்கள் அனைத்தும் ஒரு கொள்வனவாக கருதப்படாமையால் கொள்வனவுக் கைநூலின் 2.14.1 வழிகாட்டிக்கு முரணாக ரூபா 400,935,000 தொகையான மதிப்பீட்டுக் கிரயத்துடன் இக் கொள்வனவுகள் அமைச்சரவைக் கொள்வனவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தேசிய இளைஞர் படையணியின் இளைஞர் ''பௌருஷாபிமான ராத்ரிய'' நிகழ்ச்சிகான செலவினம் அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டவாறு இந் நிகழ்ச்சிக்காக ரூபா 3,939,062 தொகை செலவிடப்பட்டிருந்தது. இச் செலவினத்தில் ரூபா 2,634,272 தொகையான பொருட்கள் மற்றும் சேவைகள் பிரமாணங்கள் பின்பற்றப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 1.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தேசிய இளைஞர் படையணியால் உடற்பயிற்சி ஆலொசகர்களாக 2011 மே மாதம் நியமனம் வழங்கப்பட்ட 31 உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி பேண்ட் வாத்தியக் குழு ஒன்றை அமைத்து அவர்களுக்கு அவசியமான உபகரணங்களையும் ஆடையணிகளையும் 2011 ஆம் ஆண்டின் 05 மாதங்களுக்கு மாத்திரம் சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக ரூபா 4,520,320 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 06 சந்தர்ப்பங்களின் போது பேண்ட் வாத்திய வாசிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 403,500 தொகையான படிப்பணங்களும் செலுத்தப்பட்டிருந்தன. இவ் உத்தியோகத்தர்களின் நாளாந்த வரவு அறிக்கைகளில் கண்காணிப்பு உத்தியோகத்தரின் சான்றுறுதி இருக்கவில்லை.

## 1.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சிக்காக தேசிய அளைஞர் படையணியால் ரூபா 3,408,363 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சின் கொள்வனவுக்குழுவிற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. இவ்வாறே இது வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டமாகவும் இருக்கவில்லை.

(ஆ) 04 உத்தியோகத்தர்களின் சேவையை முடிவுறுத்தியமைக்கு எதிராக அவர்களால் கம்பஹா ஊழியர் பிணக்குத் தீர்வுச் சபையில் தொடரப்பட்ட வழக்கின் தீர்வாக ரூபா 1,272,000 தொகை அச் சபையில் வைப்புச் செய்வதற்கும், அத் தீர்ப்பிற்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு இடுவதற்கும் ரூபா 18,400 தொகை செலவிடப்படுவதற்கு தேசிய இளைஞர் படையணிக்கு நேர்ந்தது.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் வெற்றிடமும்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

(i) இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 50 | 32 | 18 |
| மூன்றாம் நிலை | 67 | 61 | 06 |
| இரண்டாம் நிலை | 457 | 340 | 117 |
| ஆரம்ப நிலை | 70 | 56 | 14 |
| ஏனைய (இணையானவை) | 05 | 02 | 03 |
| மொத்தம் | 649 | 491 | 158 |

**(ii) தேசிய இளைஞர் படையணி**

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 10 | 07 | 03 | - |
| நிறைவேற்றுத் தரம் அல்லாதோர் | 309 | 267 | 42 | - |
| ஏனையோர் (ஒப்பந்த, இரண்டாம் நிலை மற்றும் நாளாந்த அடிப்படை) | 205 | 244 | - | 39 |
| மொத்தம் | 524 | 518 | 45 | 39 |

(ஆ) தேசிய இளைஞர் படையணியின் பதவியணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வருமாறு ஊழியர் வெற்றிடம் நிலவிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தொம்பே பயிற்சி நிலையம் 2010 ஆகஸ்ட் முதல் மூடப்பட்டிருந்த போதிலும் அந்நாள் முதல் 2011 ஆகஸ்ட் வரையிலும் அங்கிருந்த உத்தியோகத்தர்கள் மூன்று பேருக்கான சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக ரூபா 727,636 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) தேசிய இளைஞர் படையணிக்கு அவசியமான மனிதவளங்கள் வரிசை அமைச்சின் மூலம் நேரடியாக ஆட்சேர்க்கப்படுவதற்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனி ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் 07 மாதங்களுக்காக மாத்திரம் ரூபா 1,792,374 தொகைய நிறுவகக் கட்டணமாக அக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.11.2 முறையற்ற விதத்தில் வேறு தரப்பினரிடம் இருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

1997 சனவரி 14 ஆம் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பொது முயற்சியாளர்களின் வளங்கள், அமைச்சால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படலாகாத போதிலும் 05 பொது முயற்சிகளில் கடமையில் ஈடுபட்டுள்ள 18 ஊழியர்கள் அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேசிய இளைஞர் சேவைகள் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மாத்திரம் அமைச்சிற்கு ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்காக 2011 ஆம் ஆண்டின் போது சம்பளத்திற்காக ரூபா 1,373,425 தொகை அந் நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவை அமைச்சினால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டு தலைப்பு - 215 தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 யூன் 27 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களில் (அ) முதல் (எ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| பொறுப்புகள் பதிவேடு | நி.பி.214 |
| கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய இல. ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) பாதீட்டு முரண்**

15 செலவின விடயங்களுக்கான மேலதிக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச்

செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் நூற்றுக்கு 32 முதல் நூற்றுக்கு 86 வரையான வீச்சில் காணப்பட்டது.

**(இ) வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 02 வருட காலம் கடந்திருந்த ரூபா 6,171,253 தொகையான வைப்பு மீதி தொடர்பாக நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

21501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதி அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,526,052 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

## 2.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) விளைவற்றதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுமான சொத்துக்கள்**

126 இயந்திரங்களும் வேறு 21 சொத்துக்களும் முறையே 04 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 03 கட்டிடங்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வேறு நிறுவகங்களிடம் உள்ளசொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

21 தகவல் தொழிநுட்ப / தொழிநுட்பக் கல்லூரிகள் உள்ள நிலப்பகுதி 266 ஏக்கர் 02 ரூட் 24 பேர்ச்கள் அக் கல்லூரிகளுக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 03 அமைச்சுக்களில் காணப்பட்ட 06 வாகனங்கள் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) தாபனவிதிக்கோவை** | |
| XII ஆம் அத்தியாயத்தின் 14.4 உப பிரிவு மற்றும் XV ஆம் அத்தியாயம் | கல்வித் தொழிநுட்பவியல் பட்ட பாடநெறியை இடைநடுவில் கைவிட்ட நான்கு விரிவுரையாளர்களுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 556,700 தொகை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| 2006 மே 30 ஆம் திகதிய 9/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை | இச் சுற்றறிக்கைக்கு உரிய வகையில் பணிப்பாளர் நாயகத்தினால் அவ்வப்போது விநியோகிக்கப்பட்டிருந்த சுற்றறிக்கைக் கடிதங்களின் படி தொழிநுட்பக் கல்லூரியின் கல்வி சார் பதவியணியினரின் அலுவலக நேரம் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 வரையாகக் காணப்பட்டது. அவ்வாறு வருகை பதிவு செய்யப்படாது விரிவுரையாளர்கள் சம்பளத்தைப் பெற்றிருந்தனர். |

## 2.6 செயலாற்றல்

2011 வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) வருடாந்த செயற்பாட்டுத்திட்டம், கூட்டுத்திட்டத்துடன் இணங்காமை

2008 – 2012 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்திட்டத்தின் 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான மூலதனச் செலவினங்கள், அவ்வாண்டின் செயற்பாட்டுத்திட்டத்துடன் ஒப்பிடுகையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் கூட்டுத்திட்டத்திற்கு இணையாக வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்திற்கு இணங்க செயற்பட்டிராமை

2011 ஆம் ஆண்டிற்காக மூலதனச் செலவினமாக ரூபா 279.15 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் இதில் ரூபா 92.45 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(இ) தகவல் தொழிநுட்ப மற்றும் தொழிநுட்ப கல்லூரியின் செயலாற்றல்

(i) 03 பல்கலைக்கழகங்களிலும் 19 பல்கலைக்கழகங்களிலும் முறையே 2007 – 2010 மற்றும் 2008 – 2009 ஆம் ஆண்டுகளின் போது பரீட்சை பெறுபேறுகளின் படி அப் பரீட்சைகளுக்குத் தோற்றிய 6118 மாணவர்களில் 4822 பேர் அதாவது நூற்றுக்கு 79 பேர் சித்திபெற்றிருக்கவில்லை.

(ii) தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 10 பாடநெறிகளுக்காக 2007, 2008, 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது பரீட்சைக்குத் தோற்றிய 927 மாணவர்களில் 886 பேரும் சித்தியடைந்திருக்கவில்லை.

(iii) 20 தொழிநுட்பக் கல்லூரிகளில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 304 பாடநெறிகளில் 147 பாடநெறிகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய தொழிற் தகைமை (NVQ) 05, 06 பரீட்சைப் பெறுபேற்றை மதிப்பிடலும் பாடநெறிகளை நடாத்தலும்

---

(i) 07 தகவல் தொழிநுட்பக் கல்லூரிகளில் 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது தேசிய தொழிநுட்பத் தகைமை (NVQ) 05, 06 எழுத்து மூலப் பரீட்சைக்காகத் தோற்றிய 365 மாணவர்களில் 172 பேர் பரீட்சையில் சித்திபெற்றிராததுடன் இது நூற்று வீதமாக 47 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இவ்வாறே 2011 ஆம் ஆண்டின் போது 390 மாணவர்கள் தோற்றிய போதிலும் இதில் 275 பேர் சித்திபெற்றிராமையால் சித்திபெறாதோரின் நூற்றுவீதம் 71 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(ii) மரதானை தகவல் தொழிநுட்பக் கல்லூரியின் பௌதீக விஞ்ஞான பொறியியல் தொழிநுட்பப் பாடநெறிக்காக தொழிநுட்பக் கல்வி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 87,802,162 தொகையான பெறுமதியான உபகரணங்கள் 2008 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. ஆப் பாடநெறி (NVQ 05) இற்காக 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது முறையே 31 மாணவர்களும் 20 மாணவர்களும் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அவர்களில் எஞ்சியிருந்த முறையே 04 பேருக்கும் 14 பேருக்குமாக 2011 திசெம்பர் அளவிலும் விரிவுரைகள் பூர்த்திசெய்யப்பட்டு பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது மதிப்பிடப்பட்ட மாணவ உதவுதொகைகளும் நாளாந்த மாணவர் படிப்பணங்களும் முறையே ரூபா 19,000,000 ஆகவும் ரூபா 11,700,000 ஆகவுமான போதிலும் இவற்றில் முறையே ரூபா 7,698,514 தொகையும் ரூபா 2,829,715 தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது. இது உரிய ஆண்டுகளின் போது சதவீதமாக முறையே நூற்றுக்கு 40.51 ஆகவும் ரூபா 24.18 ஆகவும் காணப்பட்டன.

## 2.7 செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

ஒரு தொழிநுட்பக் கல்லூாயில் வங்கிக் கணக்கொன்று 06 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது ரூபா 828,436 மீதியாகக் காணப்பட்டது.

## 2.8 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட 03 வாகன விபத்துக்களில் ரூபா 134,375 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் குறித்த காலப்பகுதியின் போது பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிராமையால் ரூபா 4,060 தொகை மிகை அறவீடுகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 2.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2009 ஆகஸ்ட் 19 ஆம் 24 ஆம் திகதிகளின் போது நடாத்தப்பட்ட சர்வதேச தொழில்சார் கல்வி மற்றும் பயிற்றுவிப்பு கூட்டம் (IVETA) இற்காக வலையமைப்பு வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. ஆக் கூட்டம் நிறைவடைந்து ஒரு வருட காலம் கடந்ததை அடுத்து 2010 யூன் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு உரித்தாக ரூபா 56,576 தொகையான பற்றுச்சீட்டுக்கள் தீர்க்கப்பட்டிருந்தன.

## 2.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

பின்வரும் கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குக் குழுவினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை, அதிகாரிகளினால் செயற்படுத்தப்படுகையில் தாமதப் போக்கு காணப்பட்டது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் | அரசாங்க கணக்கு குழுக் கூட்டத் திகதி | அரசாங்க கணக்கு குழுவின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இல.** | | | |
| 2005 | 5.1 | கடன் மீதி | 2010.08.19 | கடன் மீதியை அறவீடு செய்வாற்கான நடவடிக்கை எடுத்தல் |

(ஆ) 2011 ஆகஸ்ட் மாதம் தொழிநுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்பட்ட பரீட்சையின் போது தேசிய தொழிநுட்பச் சான்றிதழ் அளவீட்டு மெய்மையாய்வு முழுநேர (மதிய) பாடநெறி விடய இல. 646 மதிப்பீடும் கிரயமும் முதலாவது வினாத்தாளில் இரண்டாம் வினாவின் I ஆவது II ஆவது பிரிவிற்கு ஒரே வினாவே அச்சிடப்பட்டிருந்தது.

(இ) நேர்முகப் பரீட்சைக்காக தோற்றிய பரீட்சார்த்தியின் கல்வித் தகமைகளையும் தொழிற்துறைத் தகமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு வர்த்தமானியின் iv ஆம் பந்தியின் பிரகாரம் தொழிநுட்பக் கல்லூரியின்.׃. தொழிநுட்பக் கல்லூரியின் பணிப்பாளர்/ அதிபரால் மேற்கொள்ளப்பட்ட நேர்முகப் பரீட்சையைத் தொடர்ந்தே பதிவிற்காக உரிய தகவல்கள் பெறப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும நேர்முகப் பரீட்சைக்காகத் தோற்றிய பரீட்சார்த்திகளின் கல்வித் தகமைகளையும் தொழிற்தகமைகளையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு உரிய சான்றுகள் இருக்கவில்லை.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையும் வெற்றிடமும்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | மிகைகள் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1205 | 444 | 761 | - |
| மூன்றாம் நிலை | 40 | 10 | 30 | - |
| இரண்டாம் நிலை | 1343 | 941 | 402 | - |
| ஆரம்ப நிலை | 981 | 896 | 85 | - |
| ஏனையவை (இணைந்த) | - | 03 | - | 03 |
| மொத்தம் | 3569 | 2294 | 1278 | 03 |

## 2.13 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

நி.பி. 134(2) மற்றும் 1998 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய ஐஏஐ/98/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவினைச் செயற்படுத்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சு மட்டத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் முறையாக நடாத்தப்பட்டிருந்ததுடன் குழுத் தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவது தொடர்பாக முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை ஜேர்மன் தொழிநுட்பப் பயிற்சி நிறுவகம்

இலங்கை ஜேர்மன் தொழிநுட்பப் பயிற்சி நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக விபரமான அறிக்கை நிறுவகத்தின் அதிபருக்கு 2012 நவம்பர் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஜேர்மன் தொழிநுட்பப் பயிற்சி நிறுவகத்தின்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரைவு நிதிக்கூற்றுக்களின் பற்றாக்குறையைச் சீராக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட நாட்குறிப்புப் பதிவேடு சீராக்கப்பட்டதை அடுத்து பெற்றுக்கொள்ளப்பட்ட மீதி இறுதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதியுடன் சமப்பட வேண்டி போதிலும் 11 செலவின விடயங்களின் ரூபா 903,107 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் நிலவின.

(ஆ) முறையான வகையில் நாட்குறிப்புப் பதிவுகள் பயன்படுத்தப்பட்டிராமையால் பேரேட்டில் பதியப்பட்டிருந்த ரூபா 64,127,930 தொகையான 13 கணக்கு விடயங்கள் பரீட்சை மீதியுடனும் இறுதி நிதிக்கூற்றுக்களுடனும் இணக்க முடியாதிருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு இறுதி நிதிக் கூற்றுக்களின் எண்ணிக்கை அத்தினத்தில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியுடன் இணக்க முடியாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஈ) பல்வேறு நாடுகளிலிருந்தும் நிறுவகங்களிலிருந்தும் நபர்களிடமிருந்தும் நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்கள் 1080 புத்தகங்களும் 91 பல்வேறு உபகரணங்களினதும் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இவற்றின் 55 அலகுகள் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 565,500 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| **(அ) அதிகாரச்சட்டங்கள்** | |
| 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட அந்த அதிகாரச்சட்டத்தின் 26 (அ) பிரிவு | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரியில் 33 1/3% ஆன ரூபா 101,430 பிடித்து வைக்கப்படடிருக்கவில்லை. |
| **(ஆ) சுற்றறிக்கை** | |
| (i) 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.1.6(எ) ஆம் உப பந்தி | கட்டுப்பாட்டுச் சபையினதும் அமைச்சுச் செயலாளரினதும் அங்கீகாரம் இன்றி வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே பயணிப்பதற்காக நிறுவகத்தின் பிரதான பொறியியலாளருக்கு ஓர் வான் வழங்கப்பட்டிருந்தது. இவர் ஓய்வுபெறும் வரையிலான 21 மாதங்கள் இவ் வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| • 9.2 உப - பந்தி | அமைப்பு வரைபடமும் ஊழியர் எண்ணிக்கையும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| • 9.8.2 உப - பந்தி | பதவியணி ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக ரூபா 920,390 தொகைசெலுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் செயற்பாட்டு விடயங்களின் விளைவு ரூபா 13,181,942 தொகையான பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 44,070,519 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ரூபா 30,888,577 தொகையான சாதகமான விருத்திக்கும், முன்னைய ஆண்டின் போது ரூபா 13,583,739 தொகையான பயன்படுத்தப்படாத இருப்புகளின் விற்பனை நட்டம் ஏற்பட்டமையும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பணிக்கொடைக் கொடுப்பனவு ஒதுக்கம் ரூபா 24,216,326 தொகையால் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டு வருமானம் ரூபா 4,313,263 தொகையால் அதிகரித்திருந்தமை போன்ற விடயங்கள் குறிப்பாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### (அ) செயலாற்றல்

நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றல் முன்னை சில ஆண்டுகளின் செயலாற்றலுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **பாடநெறி** | **மாணவர்களின் எண்ணிக்கை** | | | |
|---|---|---|---|---|
| **முழுநேரப் பாடநெறிகள்** | **2011** | **2010** | **2009** | **2008** |
| நடாத்தப்பட்ட பாடநெறி எண்ணிக்கை | 09 | 09 | 09 | 09 |
| பாடநெறிக்காக விண்ணப்பித்த எண்ணிக்கை | 1848 | 1922 | 2033 | 2335 |
| பாடநெறிக்காக சேர்க்கப்பட்ட எண்ணிக்கை | 406 | 341 | 334 | 364 |
| இடைநடுவில் பாடநெறியைவிட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கை | 09 | 14 | 20 | 30 |
| பாடநெறியின் இறுதியில் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை | 284 | 316 | 329 | 267 |
| சித்தியெய்திய எண்ணிக்கை | 248 | 265 | 280 | 242 |
| சித்தியெய்தாத எண்ணிக்கை | 36 | 51 | 49 | 25 |
| **பகுதிநேரப் பாடநெறிகள்** | | | | |
| சேர்க்கப்பட்ட எண்ணிக்கை | 2716 | 2427 | 2412 | 2491 |
| பாடநெறியைப் பூர்த்திசெய்தவர்களின் எண்ணிக்கை | 1802 | 1781 | 1675 | 1715 |
| இடைநடுவில் பாடநெறியைவிட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கை | 469 | 283 | 281 | 273 |

**பொரளைக் கிளை**

| **முழுநேரப் பாடநெறிகள்** | | | | |
|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட பாடநெறி எண்ணிக்கை | 02 | 01 | 01 | - |
| பாடநெறிக்காக சேர்க்கப்பட்ட எண்ணிக்கை | 50 | 18 | 15 | - |
| இடைநடுவில் பாடநெறியைவிட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கை | விபரம் இல்லை | 06 | 03 | - |
| பாடநெறியின் இறுதியில் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை | விபரம் இல்லை | 09 | 12 | - |

**பகுதிநேரப் பாடநெறிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | 02 | - | - | - |
| பாடநெறியைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை | 64 | - | - | - |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முழு நேர பாடநெறிக்காக விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியான வீழ்ச்சி காணப்பட்டது.

(ஆ) பொரளைக் கிளையின் 100 மாணவர்களுக்கு கல்வி வசதிகள் நிலவிய போதிலும் இது பூர்த்தியாகியிருக்கவில்லை. எவ்வாறெனினும், சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.

(இ) 06 பகுதி நேரப் பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் மிகையான எண்ணிக்கை நூற்றுக்கு 38 முதல் நூற்றுக்கு 70 வரையான வீச்சில் காணப்பட்டது. இதனால் பூர்த்தியாக வேண்டிய பௌதீகப் பயிற்சிக் காலப்பகுதியின் போதும் தரத்தில் குறைவு ஏற்படாவிடில் ஆட்சேர்க்கப்படக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடியதாக இருந்தது.

(ஈ) 2011 முதல் அரையாண்டின் போது மொத்த பாடநெறி வருமானத்தில் நூற்றுக்கு 83 இதற்கான பதவியணிக்கான கொடுப்பனவிற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

## 4.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) பயிலுனர்களுக்காக மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா 1,000 தொகையான படிப்பணத்தில் ஒரு வருடத்திற்கு ரூபா 275 தொகை அறவிடப்பட்டு பயிற்சிக் காலத்தின் போது ஏற்படும் விபத்திற்கான நட்டஈடு செலுத்தப்படுவதற்காக பயிலுனர் காப்புறுதி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான திறைசேரி அங்கீகாரம்

கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. 2011 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் இது ரூபா 1,751,403 தொகையான மீதியாக இருந்த போதிலும் 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது விபத்துக்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது நிலையான வைப்புக்களில் ரூபா 20,495,318 தொகையான முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 முகாமைத்துவ நலிவுகள்

2005 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் எனினும் இது வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிராத ரூபா 8,013,111 தொகையான 03 கடன் மீதிகள் காணப்பட்டன.

### 4.4 சிக்கனமற்ற செலவினங்கள்

2011 புதுவருடக் கொண்டாட்டங்களுக்காக வரிசை அமைச்சின் நலன்புரி நிதியத்திற்கு ரூபா 50,000 தொகை பாடநெறி வருமானத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டுச் செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையேயான முரண்களைக் கருத்திற்கொள்கையில் 03 செலவின விடயங்களுக்காக பாதீடப்பட்ட செலவினத்தில் நூற்றுக்கு 32 சதவீதமளவில் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவக அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடு
(இ) ஊழியர் ஆட்சேர்ப்பு
(ஈ) கடன்பட்டோர்